சார்பு நீதிமன்றம், திருவாரூர்.

முன்னிலை திரு. M. முருகன், M.L.,

சார்பு நீதிபதி, திருவாரூர்.

<u>அசல் வழக்கு எண்.56/2025</u>

24.03.2026

வா.சா.1 திருமதி. பெமினா, த/பெ. அருள்ராஜ்

**பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை**

பிரதிவாதி எந்த தேதியில் என்னிடம் பணம் கேட்டார் என்றால் 05.05.2024 க்கு முன்பு 2 1/2 மாதங்களுக்கு முன்பு பணம் கேட்டார். ஆனால் 05.05.2024 ல் தான் பணம் கொடுத்தேன். பிரதிவாதி ஏதோ மெஷின் வாங்கவேண்டும் என சொல்லி என்னிடம் பணம் கேட்டார். பிரதிவாதி என்னிடம் எந்த தேதியில் பணம் கேட்டார் எதற்காக பணம் கேட்டார் என்ற விவரத்தை முதல்விசாணையிலும் பிராதிலும் சொல்லவில்லை என்றால் சரிதான். பிரதிவாதிக்கும் எனக்கும் எவ்வளவு நாளாக பழக்கம் என்றால் பிரதிவாதி எனக்கு பழக்கமில்லை. எனது மாமனாருக்கு பிரதிவாதியின் கணவர் பழக்கமாவார், அதனடிப்படையில் எங்கள் வீட்டிற்கு வந்துசெல்வதால் எனக்கும் பழக்கம் ஆவார். எனக்கு அதிகமாக சௌபர்னிகா பழக்கம் இல்லை என்றால் சரிதான். எனவே, பிரதிவாதியை நம்பி ரூ.5,00,000/- கடன் கொடுக்கவில்லை என்றாலும் அவரின் கணவரை நம்பிதான் கடன் கொடுத்தேன் என்றாலும் சரிதான். பிரதிவாதியின் கணவரிடம் ரூ.5,00,000/- கடன் கொடுத்தத்காக கடனுறுதிசீட்டு எழுதிவாங்கியுள்ளேனா என்றால் எழுதிவாங்கியுள்ளேன். எனவே நான் கடன் கொடுத்ததாக சொல்லும் ரூ.5,00,000/-க்கு இரண்டு கடனுறுதிசீட்டு எழுதி வாங்கியுள்ளேன் என்றால் சரிதான். நான் சொல்வது போல் பிரதிவாதி என்னிடம் கடன் கேட்கவில்லை என்றாலும் பிரதிவாதிக்கு நான் 05.05.2024 ல் கடன் கொடுக்கவில்லை என்றாலும் சரியல்ல. 05.05.2024 அன்று பிரதிவாதி தாவா கடனுறுதிசீட்டில் கையொப்பம் போட்டு ரூ.5,00,000/- கடன் வாங்கவில்லை என்றால் சரியல்ல. தாவா கடனுறுதிசீட்டு வழக்கிற்காக உற்பத்தி செய்யப்பட்டது என்றால் சரியல்ல. பிரதிவாதிக்கு நான் அறிவிப்பு கொடுத்த பின்னிட்டு பிரதிவாதி என்னை நேரில் சந்தித்து கேட்டபோது பெயரளவிற்கு அறிவிப்பு கொடுத்ததாக நான் சொன்னேன் என்றால் சரியல்ல.

நான் உண்மையை மறைத்து பொய்யான காரணங்களை சொல்லி வழக்கு தாக்கல் செய்துள்ளதால் தாவாபடி எனக்கு பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.

Typed down to my dictation, In my presence and hearing and under my personnel direction and Superintendence and admitted by the witness to be Correct.

Sd/ M. Murugan
Subordinate Judge,
Tiruvarur.